[1996 ஜூலை 31

முற்பகல் 10-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நம்முடைய அரசின் சார்பாக ஒரு முறையீட்டு வழக்கு தொடரப்பட்டு, காவிரியில் நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்புக்கேற்ப உரிய தண்ணீரை, இந்தத் திங்களுக்கு எவ்வளவு வழங்க வேண்டுமோ அதனை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வகையிலும், பொதுவாக நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வகையிலும் அந்த முறையீட்டிலே குறிக்கப் பெற்று, அதனை விசாரித்த உச்ச நீதிமன்றத்தினுடைய மாண்புமிகு நீதிபதிகள் நேற்றையதினம் தீர்ப்பு என்று வழங்குவதற்குப் பதிலாக ஒரு அறிவுரையை வழங்கிய செய்தி இரவு 8 மணிக்கு எனக்குக் கிடைத்தது. அந்தச் செய்தி கிடைத்தவுடன் டெல்லியிலே தங்கி வழக்கை நடத்திக் கொண்டிருக்கின்ற வழக்கறிஞர்களோடும், நம்முடைய அரசின் வழக்கறிஞர்களோடும், அரசு பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளோடும் கலந்து பேசினேன். இரவு ஒரு மணி வரையில் இத்தகைய பேச்சுவார்த்தைகள் மூலம் நாம் என்ன நிலை எடுக்கலாம் என்பதைப் பற்றிச் சிந்தித்து நாம் எத்தகைய நிலை எடுத்துள்ளோம் என்பதை இந்த அவைக்கு விளக்குகின்ற வகையில் சில கருத்துக்களை இங்கே கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருப்பது, இரண்டு மாநில முதலமைச்சர்களும் கலந்து பேசி-பேசுவது என்றால் நடுவர் மன்றத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் அல்ல. நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின்படி, இடைக்காலத் தீர்ப்பின்படி இப்பொழுது பெற வேண்டிய தண்ணீர் குறித்து அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தலாம். அதற்கு இரண்டு முதலமைச்சர்களும் தயாரா என்பதை இன்று பிற்பகல் ஒரு மணிக்குள்ளாக உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஒரு அவசரமான செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு பட்டேல் அவர்கள் ஒரு ஃபேக்ஸ் கடிதம் நேற்று இரவு எனக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்தக் கடிதத்தை, அதற்கு நான் எழுதிய பதில் கடிதத்தை, இரண்டையும் இந்த அவையின் முன்னால் வைப்பது என்னுடைய பெரும் கடமையாகும்.

*1996 ஜூலை 31]* [கலைஞர் மு. கருணாநிதி]

*"My Dear Karunanidhiji,*

We have received a communication from our Supreme Court Advocate Shri.Mohan V. Kattarkee in the context of the Supreme Court hearing which took place today on the Cauvery Water Dispute. It appears that in the course of the proceedings, the Hon'ble Bench advised that the Chief Ministers of Karnataka and Tamil Nadu meet together, as soon as possible, in order to find an amicable solution at the political level to the problem of implementation of the interim order of the Tribunal. We are told that the dates of the proposed meeting between ourselves should be conveyed to the Hon'ble Bench by tomorrow afternoon. I personally welcome this advice of the Supreme Court very warmly and I do hope that you reciprocate my sentiments. While I would like to have this meeting held as soon as possible, you may be aware that our Legislature is now in session which would make it a little difficult for me to meet with you prior to August 14 when the session concludes. I would, therefore, suggest that we decide to meet at any date subsequent to August 15th, (Independence day) which is convenient to you. The venue of our meeting may also be decided at your convenience. I propose to brief our Supreme Court Advocate accordingly. Awaiting an early reply. With best wishes,

***Yours sincerely,***
*Patel."*

இந்தக் கடிதத்திற்குப் பிறகு அவருக்கு நான் இன்று எழுதியுள்ள கடிதத்தில்,

*``Dear Thiru Patel,*

I acknowledge, with thanks, the receipt of your fax message of yesterday. I am also advised that the Supreme Court Bench, yesterday, during the hearing of the Interlocutory Application of Tamil Nadu seeking a mandatory direction to Karnataka to implement the interim Award of the Cauvery Water Dispute Tribunal, has decided that the Chief Ministers of Tamil Nadu and Karnataka meet at the earliest and evolve a solution for the release of Cauvery Waters to Tamil Nadu. In deference to the desire of the Court, I am agreeable to a meeting so that we can evolve an arrangement for release of water to meet the requirements of the Cauvery Ayacut in

Tamil Nadu in terms of interim order of the Tribunal. As you are aware, almost all the farmers in the delta have lost their Kuruvai crop. The storage in the Mettur reservoir is too inadequate. The farmers need to be assured of the certainty of the supplies at least to cultivate the Samba crop. In view of the extreme urgency, your suggestion that we meet subsequent to August 15, is far out of this requirement.

*முற்பகல் 10-20*

I would suggest that, even though our Legislatures are in session, we meet within a week from now, on any day except the 4th August, 1996, as I have already a programme in the mofussil on that day. Kindly let me know when we would meet at the earliest. The venue can be Chennai, (Madras) and I trust you would find it convenient. I have pleasure to invite you and your team here to be our guests. I am instructing our Counsels to convey to the Chief Justice today the contents of our correspondence.

With kind regards".

என்று இப்படி நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அவர் 15 ஆம் தேதிக்குப் பிறகுதான் சந்திக்க இயலும் என்று சொல்லியிருப்பது மிக மிகக் காலதாமதமான ஒரு செய்தி ஆகும். அதற்குள்ளாக நம்முடைய தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்பதும் ஏறத்தாழ 42 டி.எம்.சி.-யில் இதுவரையிலே அவர்களாகக் கொடுத்தது 5 டி.எம்.சி., இயற்கையாகத் தந்தது ஒரு 5 டி.எம்.சி., என்ற அளவிலேதான் கிடைத்திருக்கிறது. ஏறத்தாழ 30 அல்லது 31 டி.எம்.சி., தண்ணீர் இந்தத் திங்களில் நமக்குத் தரவேண்டும். அதைப்பற்றித் தான் இப்போது பேச்சுவார்த்தையே தவிர மொத்த, நீண்டகால இந்தக் கோரிக்கையைப் பற்றிய பேச்சுவார்த்தை அல்ல. அப்படி ஒரு பேச்சுவார்த்தை வருமானால், அதை எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசித்தான், அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டுத்தான் அந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவேன். இப்போது இந்த 30, 31 டி.எம்.சி. தண்ணீரைப் பெறுவதைப் பற்றிய பேச்சு வார்த்தை என்பதால்தான் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு விரைவிலேயே சந்திக்கவேண்டும் என்றும், சென்னையில் சந்திப்பதற்கு அவர்களை வரவேற்பதற்குத்தயாராக இருக்கிறேன் என்றும் ஆகஸ்டு முதல் வாரத்திலேயே சந்திப்பதற்கு ஒரு வசதியான தேதியை மாண்புமிகு திரு. பட்டேல் அவர்களே குறிப்பிடவேண்டும் என்று கேட்டும் எழுதியிருக்கிறேன். இதுதான்

*1996 ஜூலை 31]* [கலைஞர் மு. கருணாநிதி]

இப்போது அவைக்கு நான் தருகின்ற தகவல். இந்தச் செய்தியை சுப்ரீம் கோர்ட்டுக்கும் நாங்கள் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்ற செய்தியை மாண்புமிகு திரு. பட்டேல் அவர்கள் தெரிவித்து இருப்பதைப் போல நாமும் நம்முடைய அரசின் சார்பாக நம்முடைய வழக்கறிஞர்கள் மூலமாக தெரிவிக்க இருக்கிறோம் என்பதையும் அறிவித்து இந்த அளவிலே அமைகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் ஏற்கனவே ஆணையிட்டு இன்று பிற்பகலுக்குள் தேதி அறிவிக்கப்படவேண்டும் என்ற சூழ்நிலையில் இப்போது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பேக்ஸ் மெசேஜ் அனுப்பியிருக்கிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அதற்கு பதில் அனுப்பியிருக்கிறார்கள். இந்த முக்கியமான பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி தொலைபேசியில் நேரத்தை, ஒரு நாளை பிக்ஸ் செய்து இன்று மாலைக்குள் அந்தத் தேதியை அறிவிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைபேசியில் பேசினால் பிறகு அவரும் மறுக்கலாம், நாமும் மறுக்கலாம், அப்படிப் பேசவில்லை என்று. அதனால் தான் எதுவும் ரெக்கார்ட் ஆக பதிவு ஆக வேண்டும் என்ற முறையிலே அவரும் கடிதம் எழுதியிருக்கிறார், நானும் கடிதம் எழுதியிருக்கிறேன். இப்படி பேக்ஸில் அனுப்பியிருக்கிறோம். ஆதாரபூர்வமாக இது உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும். இந்தக் கடிதத்திற்குப் பிறகு அவர் நான் சொல்லியிருக்கிற 4ஆம் தேதியை தவிர ஆகஸ்டு முதல் வாரத்தில் எந்தத் தேதியென்றாலும் அவர் என்னோடு பேசலாம், நானும் அவரோட்டு பேசுவேன். தொலைபேசியில் பேசுவதற்கு இந்தப் பேக்ஸ் தடங்கலாக இருக்காது. பேசுவோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தடவையும் உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலை கர்நாடக அரசு, கர்நாடகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற முதலமைச்சர்கள் மறுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மறுத்து வந்து கொண்டிருக்கிற காரணத்தால் தான் நாம் மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறோம். மீண்டும் இதுபோன்று மறுத்து, மறுத்து அவர்கள் மறுப்பு தெரிவித்துக் கொண்டே காலத்தைக் கடத்துவதற்கான அத்தனை நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடுகிறபோது மீண்டும் நாம் நம்முடைய மத்திய அரசை அணுகி

இதுபோன்று அந்த அரசு இப்படி உச்ச நீதிமன்றத்தை மதிக்காத தன்மையில் இருக்கிறதே. பொதுவாக நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை மதிக்காத ஒரு தன்மையில் இருக்கிறதே, பாரதப் பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற ஆலோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? ஆக கர்நாடக அரசு தண்ணீர் தரும், இந்த மாதத்திற்குரிய தண்ணீர் தரும் என்று நம்பித்தான் நாம் இந்த தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் திறந்து விட்டு இருக்கிறோம். பொதுவாக இன்றைக்கு பயிரிடப்பட்டு இருக்கக்கூடிய, ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாக விவசாயம் செய்யப்பட்டு இருக்கிற பயிர்கள் கூட கருகிப் போகக்கூடிய ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு போவார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது காவிரிப் பிரச்சினைக்கு, ஒரு நீண்டகால, முழுமையான தீர்வுக்காக நடைபெறுகின்ற பேச்சுவார்த்தை அல்ல. நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட பேச்சுவார்த்தை என்றால், அது நடுவர் மன்றம் என்கின்ற அந்த வட்டத்திற்குள் நடைபெற வேண்டும்; அதைக் கடந்து நடைபெறக் கூடாது என்பதை இன்று, நேற்று அல்ல; நீண்டகாலமாக நான் தெரிவித்து வந்திருக்கிறேன்.

இப்பொழுதுள்ள பிரச்சினை, குறுவை ஏற்கனவே போதுமான அளவிற்குப் பயிரிடப்பட முடியாத சூழ்நிலை; சம்பாவும் பயிரிட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடாமல் இருக்க, இந்தக் காலக்கட்டத்திலே பெற வேண்டிய தண்ணீரை எப்படிப் பெறுவது என்பதைப்பற்றிப் பேசவும் நடுவர் மன்றத்தினுடைய இடைக்கால உத்தரவை -அந்த நிவாரண உத்தரவை-எப்படி அமல்படுத்துவது என்பதைப் பற்றிப் பேசவும்தான், அதற்காகத்தான் உச்ச நீதிமன்றம் இரண்டு முதலமைச்சர்களும் பேசத் தயாரா என்பதை இன்று பிற்பகலுக்குள்ளே அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றது. நாம் உச்ச நீதிமன்றத்தையும் மதித்துப் பேசத் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிட்டதற்குக் காரணம், நம்முடைய உரிமைகளை விட்டுக் கொடுத்து என்றைக்கும் நாம் எந்தப் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இல்லை; அதிலே காம்ப்ரமைஸே கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம்.

1996 ஜூலை 31] [கலைஞர் மு. கருணாநிதி]

அதே நேரத்திலே கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், தமிழ்நாட்டில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் நலனுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் இரண்டு மாநில அரசுகளும் ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்குக் கடந்த 27 அல்லது 28 முறை நடந்த பேச்சுவார்த்தையிலே இடமில்லாமல் போய்விட்ட காரணத்தாலும், முடிவு ஏற்படாமல் போய்விட்ட காரணத்தாலும்தான் நடுவர் மன்றத் தினுடைய உதவியை நாம் நாடினோம். நடுவர் மன்றமும் நமக்குக் கிடைத்தது. அதனுடைய தீர்ப்பும் கிடைத்தது; இடைக்கால நிவாரணம் தீர்ப்பும் கிடைத்தது; அதை நிறைவேற்றுவதிலே கர்நாடக மாநிலம் சில நேரங்களில் தடையாக இருந்தது. நிறைவேற்றவில்லை. எனவே, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல நேரிட்டது. இப்பொழுதும் செல்ல நேரிட்டிருக்கிறது. அதிலே உச்ச நீதிமன்றத்தினுடைய இந்த அறிவுரையை இன்றைக்கு ஏற்பதால் எந்தப் பாதகமும் ஏற்பட்டு விடாது. விரைவாக நமக்குக் கிடைக்க வேண்டிய, அவசரத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கும் ஒரு வழி ஏற்படும் என்ற நிலையிலேதான் அவர்களுக்கு நாம் பதில் எழுதியிருக்கின்றோம்.

மத்திய அரசை அணுகக்கூடாதா என்று கேட்டிருக்கின்றார்கள். மத்திய அரசையும் நிச்சயமாக அணுகுவோம்; அணுகிக்கொண்டுதான் இருக்கின்றோம். இருந்தாலும்கூட, சட்ட ரீதியாக நாம் பெற்றுள்ள நடுவர் மன்றத்தினுடைய நிலையை இழந்துவிட்டு, வெறும் பேச்சுவார்த்தையின் மூலமாக மாத்திரம் இதற்கு ஒரு தீர்வு காண்பதாக நாம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள வினாக்கள் மற்றும் கவன ஈர்ப்பு அறிவிக்கைகள் குறித்து

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகள் 55 மற்றும் 56-இன் கீழ் சட்டப்பேரவையில் எழுப்பியிருக்கின்ற பல்வேறு தீர்மானங்களுக்கு, அதற்குரிய காலம் முடிந்தும்கூட பதில் தரப்படவில்லை. அதைப்போல நான் எழுப்பியிருக்கின்ற பல்வேறு கேள்விகளுக்கு 70 தினங்களாகியும்கூட பதில் கிடைக்கவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கான பதில்கள் விரைவில் தரப்படுமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அவையிலே அறிவித்து விட்டேன். இந்த மாத இறுதிக்குள்